க்கப்பட்டது. ஆனால் அமெரிக்க காங்கிரஸ் 385 மில்லியன் டொலர்களுக்கே அனுமதி வழங்கியிருந்தது.

பிலிப்பைன்ஸின் அரசிற்கு அடுத்து அமெரிக்காவே பிலிப்பைன்ஸில் இரண்டாவது பெரிய தொழில் வழங்குனராக உள்ளது. பிலிப்பைன்ஸில் கிளார்க், சுபிக் அமெரிக்க இராணுவத் தளப்பிரதேசத்தில் 80000 பிலிப்பைனிய தொழிலாளர்க்கு தொழில் வழங்கப்பட்டுள்ளது.

தள வாடகை 400 மில்லியன் டொலர்களும், அமெரிக்காவின் ஆதாரமும் அங்கிருப்பதால் கிடைக்கும் வருமானமும் சேர்ந்து ஒரு பி(B)ல்லியன் டொலர்களை பிலிப்பைன்ஸின் வருமானத்திற்கு பெற்றுக் கொடுக்கிறது. இது மொத்த சுத்த உற்பத்தியில் மூன்று வீதமாகும்.

சில அரசியல் அவதானிகளின் பத்திரிகையாளர்களின் கருத்துக்களின் படி அமெரிக்க துருப்புகள் பிலிப்பைன்ஸிலிருந்து வெளியேறுவது தேவையானது எனவும், ஏனெனில் வளைகுடா நெருக்கடி காரணமாக அங்கு துருப்புகளை பலப்படுத்த வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ளது எனவும், இதற்கு பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க துருப்புக்களை வாபஸ் பெறலாம் எனவும் தெரிவித்துள்ளனர். ஆயினும் மறுபக்கத்தில் நோக்கினும், குவைத்திலும் 65000 பிலிப்பைனியர்கள் சேவை செய்வதாகவும், இவர்கள் தாய் நாட்டிற்கு திரும்பியுள்ளதால் ஏற்படப்போகும் வேலையில்லாத் திண்டாட்டம், மற்றும்

தேவாலயங்கள், மசூதிகள் எரித்தொழிக்கப்படுகின்றன. தமிழ் முஸ்லிம் மக்கள், வழிபாடு தொழுகைகளில் ஈடுபடும்போது குண்டெறிந்து கொலைகாரர்களால் வெட்டியும், அடித்தும் கொல்லப்படுகின்றனர். சின்னஞ்சிறு மழலைகளை மதிற் சுவர்களில் சிதறடித்துக் கொல்கின்றனர். மொத்தத்தில் ஈழநாட்டில் இனவெறி கோரத்தாண்டவம் ஆடுகிறது.

ஈழநாட்டின் இன்றைய அரசியல் சிக்கலொரு நெருக்கடிக்கும், இனப்படு கொலைகளுக்கும், 40 வருடங்களுக்கு மேற்பட்ட பாராளுமன்ற அரசியலில் மாறிமாறி பதவிகளுக்கு வந்த சிங்கள பேரினவாத அரசுகளின் தொடர்ச்சியான இனவாத நடவடிக்கைகளே பிரதான காரணியாகும். அதே வேளை சிறுபான்மை இனத்தவர்களிடையே மேலாதிக்கம் செலுத்திய குறுகிய இனவாதக் கட்சிகள் இளைஞர் இயக்கங்கள் ஆகிய வற்றின் இனவாத நடவடிக்கைகளும் ஒரு காரணியே.

பேரினவாதமும், குறுகிய இனவாதமும் என்கின்ற நோய் பிரித்தானியரின் வருகையுடன் தோன்றி அவர்களின் வெளியேற்றத்துடன் நாடு பூராவும் பரவ ஆரம்பித்தது. இந்நோயை மக்கள் மத்தியில் பரப்பியது சிங்கள தமிழ் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் கட்சிகளே.

தமிழ், சிங்கள முதலாளித்துவ அரசியல் கட்சிகள் பாராளுமன்ற அரசியலில், தம் அரசியல் நலன்களை நிறைவேற்றும் பொருட்டு தம் இனத்தின் மத்தியிலுள்ள நலன்களை (அரசியல், மதகலாச்சார வரலாறுகளைத் திரித்து அவற்றை உண்மைகளுடன்) பெருமை கொள்ளக் கூடிய வகையில் பேசவும் அதை மற்ற இனத்தின் நலன்களுக்கு மேலாக காட்டவும் உணர்த்தவும் முற்பட்டனர். இதன்விளைவாக தமிழ்

